செ.வெ.எண்:35 நாள்:20.01.2018

**அரியலூர் மாவட்டத்தில் கீழப்பழூரில் புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை மற்றும் மழவராயநல்லூரில் ரூ.8.50 இலட்சம் மதிப்பீட்டில் பகுதிநேர நியாயவிலைக்கடைக்கான புதிய கட்டிடத்தினை மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன் அவர்கள் திறந்து வைத்தார்கள்.**

அரியலூர் மாவட்டம், திருமானூர் ஒன்றியத்தில் கீழப்பழூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தின் கட்டுப்பாட்டின்கீழ் காந்தி நகரில் புதியதாக பகுதிநேர நியாயவிலைக் கடையினை மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் குத்துவிளக்கேற்றி திறந்து வைத்தார்கள்.

**இந்நிகழ்ச்சியில், பொதுமக்களுக்கு உணவு பொருட்களை வழங்கி மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா அவர்கள் பேசியதாவது :-**

இப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் பகுதி நேர புதிய நியாய விலைக்கடை இன்றைய தினம் முதல் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இப்புதிய நியாயவிலைக்கடை மூலம் 237 குடும்ப அட்டைதாரர்களுக்கு உணவு பொருட்கள் வழங்கப்படவுள்ளது.

இப்புதிய நியாய விலைக்கடை வாரத்தில் வெள்ளிக்கிழமை மற்றும் சனிக்கிழமைகளில் செயல்படும். இதன் மூலம் இப்பகுதி மக்கள் உணவு பொருட்களை பெற்று பயன்பெறுமாறு மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் பேசினார்கள்.

பின்னர், தா.பழூர் ஒன்றியம், குணமங்கலம் கூட்டுறவு சங்கத்தின் கட்டுப்பாட்டில் இயங்கும் மழவராயநல்லூர் பகுதிநேர நியாயவிலைக் கடை இலவச கட்டிடத்தில் இதுவரை செயல்பட்டு வந்தன. அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.8.50 இலட்சம் மதிப்பிலான நிதியை மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா அவர்கள் ஒதுக்கீடு செய்து இன்று (20.01.2018) இப்புதிய நியாய விலைக் கடைக்கான கட்டிடத்தினை மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் குத்துவிளக்கேற்றி திறந்து வைத்து, உணவு பொருட்களை வழங்கி தெரிவித்தாவது :-

இப்பகுதி மக்களின் கோரிக்கையின் அடிப்படையில் இந்நியாய விலைக்கடைக்கு புதிய கட்டிடம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு இன்று முதல் இப்பகுதி மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இதுபோன்று அரியலூர் மாவட்டத்தில் தனியார் மற்றும் மாற்றுக்கட்டிடங்களில் செயல்பட்டு வரும் நியாயவிலைக் கடைகளுக்கு விரைவில் புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என இவ்விழாவில் மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், துணை ஆட்சியர் (சமூகபாதுகாப்புத்திட்டம்) ஜெ.பாலாஜி, மாவட்ட வழங்கல் அலுவலர் இ.கதிரேசன், துணைப்பதிவாளர் (பொதுவிநியோகத்திட்டம்) கே.கே.செல்வராஜ், வட்டாட்சியர்கள் சு.முத்துலெட்சுமி (அரியலூர்), கூட்டுறவு சார் பதிவாளர் ராஜ்குமார், கீழப்பழூர், குணமங்கலம் கூட்டுறவு சங்க தலைவர்கள் பி.மதியழகன், ப.மலர்மன்னன் மற்றும் அலுவலர்கள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க செயலாளர்கள், ஏராளமான பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.